இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 07.07.2026

# கவிழ்ந்து கிடப்பதைக் கவிழ்க்கத் தேவையில்லை!

“நாட்டில் இருக்கும் சூழ்நிலையைப் பார்த்தால் எப்போது வேண்டுமானாலும் தேர்தல் வரலாம். மூன்று மாதத்திலோ, ஆறு மாதத்திலோ கூட வரலாம். எப்போது தேர்தல் வந்தாலும் தயாராக இருங்கள்” என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொன்னார்கள். உடனே ‘போலி ஜனநாயகனின்’ காப்பாளர்கள் பொங்குகிறார்கள். ‘அவர் எப்படி அப்படிச் சொல்லலாம்? மக்கள் தீர்ப்பை ஏற்க வேண்டும்’ என்று ராஜாவை மிஞ்சிய ராஜ விசுவாசியாகக் கூவுகிறார்கள்.

**180 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளாரா விஜய்? 160 தொகுதிகளைக் கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளாரா விஜய்? பெரும்பான்மையை நிரூபிக்கத் தேவையான 118 இடங்களையாவது அவருக்கு கொடுத்தார்களா தமிழ்நாட்டு மக்கள்? இல்லை. 108 இடங்களில் தான் விஜய் வென்றார். அவருக்கு முதலமைச்சர் மகுடத்தை தமிழ்நாட்டு மக்கள் சூட்டவில்லை. கடன் வாங்கி, பிச்சை எடுத்து, பலரையும் ஏமாற்றி, பொய் சொல்லி, இன்னும் பல காரியங்களைச் செய்து முதலமைச்சர் பதவியில் விஜய் உட்கார்ந்து இருக்கிறார். எனவே இது ஆடும் நாற்காலி என்பது நம்மை விட விஜய்க்கு நன்கு தெரியும். இது கவிழும் நாற்காலி என்பதும் நம்மை விட விஜய்க்கு நன்கு தெரியும்.**

விஜய் ஆட்சி அமைக்க ஆதரவு தந்த 25 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு அமைச்சர் பதவி தருகிறோம். வாரியத் தலைவர் பதவி தருகிறோம் என்று பொய் வாக்குறுதி தரப்பட்டது. கொறடா உத்தரவை மீறினால் இவர்கள் பதவி போய்விடும் என்று அனைவருக்கும் தெரியும். அப்படிச் சொல்லி ஏமாற்றினார்கள். அதனால் 25 பேர் விஜய் ஆட்சிக்கு ஆதரவாக வாக்களித்தார்கள். பதவி கிடைக்கவில்லை என்றதும் 19 பேர் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்றுக் கொண்டு போய்விட்டார்கள். அதாவது விஜய்க்கு ஆதரவாக வாக்களித்த 19 பேர் இப்போது விஜய் ஆட்சிக்கு எதிரான மனநிலையில் இருக்கிறார்கள்.

**விஜய்க்கு ஆதரவாக வாக்களித்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த 6 பேர் இப்போது எம்.எல்.ஏ.வாகவே இல்லை. நாளையே நம்பிக்கையில்லா தீர்மானம் வந்தால் இவர்களால் வாக்களிக்க முடியாது. இவர்கள் அனைவரும் குதிரை பேரம் நடத்தி ராஜினாமா செய்ய வைக்கப்பட்டவர்கள். ‘நீங்கள் ராஜினாமா செய்தால், இடைத்தேர்தல் வரும். இடைத்தேர்தல் நடந்தால் உங்களை வேட்பாளர் ஆக்கி ஜெயிக்க வைக்கிறேன்’ என்று விஜய் ஜீபூம்பா பாணியில் கொடுத்த பசப்புக்கு பல்லிளித்து ராஜினாமா செய்தவர்கள் இவர்கள். இவர்களது ராஜினாமா நாடகத்தின் சதிக்காட்சிகளை தேர்தல் ஆணையம் அறியும். எனவே இப்போதைக்கு இந்த ஆறு தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் வரப்போவது இல்லை. ‘ஜனநாயகன்’ ரிலீஸ் போலவே கிடப்பில் போட்ட விஷயமாக இந்த ஆறு தொகுதி நிலைமை ஆகப் போகிறது.**

காங்கிரஸ் கட்சி இரண்டு அமைச்சர் பதவிக்காக விஜய்யை ஆதரிக்கிறது. ‘தேர்தலுக்கு முன்பு போயிருந்தால் 70 எம்.எல்.ஏ., ஒரு துணை முதலமைச்சர், பத்து மந்திரிகள் வாங்கி இருக்கலாம்’ என்று இப்போதே துணை முதலமைச்சராகவே பேசிவருகிறார் போக்சோ புகழ் அமைச்சர் விஸ்வநாதன். இவர்கள் உள்ளாட்சித் தேர்தலில் விஜய்யை ஒரு வழி செய்து விடுவார்கள்.

விஜய் ஆட்சியை ஆதரித்து வாக்களித்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், ‘த.வெ.க.வின் கூட்டணியில் நாங்கள் இல்லை’ என்று சொல்லி விஜய் நடத்திய கூட்டணிக் கட்சிகள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. அந்தளவுக்கு விஜய் ஆட்சியை ஆதரிக்க வெட்கமாக இருக்கிறது கம்யூனிஸ்ட்டுகளுக்கு!

**விஜய் ஆட்சிக்கும், கட்சிக்கும் ஆதரவு தந்து விஜய் கட்சியோடு கூட்டணி சேர்ந்துள்ளார் வைகோ. ‘உங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்கள் இருவரையும் ராஜினாமா செய்யச் சொல்லுங்கள். இடைத்தேர்தலுக்கு நானே வந்து பிரச்சாரம் செய்து ஜெயிக்க வைக்கிறேன்’ என்று விஜய் சொன்னதை வைகோவே பொதுவெளியில் சொல்லி குதிரை பேரத்தை உறுதி செய்துள்ளார். இவரது வாக்குமூலமே போதும் குதிரை பேரம் நடந்ததை உறுதி செய்வதற்கு.**

காதர் மொய்தீன் கட்சியைப் பொறுத்தவரையில், விஜய் ஆட்சிக்கு ஆதரவு என்று காதர்மொய்தீன் கட்சி அதிகாரப்பூர்வமாக கடிதம் கொடுப்பதற்கு முன்பே, தங்களுக்கு இந்தக் கட்சியின் ஒரு எம்.எல்.ஏ. ஆதரவு இருக்கிறது என்று ஆளுநருக்கு விஜய் கடிதம் கொடுத்து விட்டார். ஒருவேளை காதர் மொய்தீன் ஆதரிக்கவில்லை என்றால் அந்த எம்.எல்.ஏ.வும் கட்சி மாறி இருப்பார். அதுதான் உண்மை.

**அ.ம.மு.க.வின் ஒரு உறுப்பினர் ஆதரவு என்பது அப்பட்டமான குதிரை பேரம் ஆகும். இதற்கு வீடியோ ஆதாரங்கள் இருக்கிறது. இது தொடர்பாக நுங்கம்பாக்கம் காவல் நிலையத்தில் டி.டி.வி. தினகரன் புகார் கொடுத்துள்ளார். ஆளுநரிடமும் வாக்குமூலம் கொடுத்துள்ளார். ஒரு அமைச்சர் பதவிக்காக, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி விஜய் ஆட்சியை ஆதரிக்கிறது.**

இவை அனைத்தும் சேர்ந்து தான் விஜய் முதலமைச்சராக நீடிக்கக் காரணமே தவிர, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மிகப்பெரிய செல்வாக்கோடு அவர் அமரவுமில்லை. அப்படி அமர்ந்தவர் கவிழ்ந்து போவார் என்று நாம் சொல்லவுமில்லை. அவரே கவிழ்ந்து தான் கிடக்கிறார். கவிழ்ந்து கிடப்பவரைக் கவிழ்க்கத் தேவையில்லை.

அவர் கவிழ்ந்து கிடக்கிறார் என்பதற்கு உதாரணம் தான், சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்களை ராஜினாமா செய்ய வைப்பது ஆகும். தன்னை ஆதரிக்கும் யாரையும் விஜய் நம்பவில்லை. நம்பத் தயாராக இல்லை. ‘தங்களை வெற்றி பெற வைத்தவரையே காலை வாரிவிட்டு வந்தவர்கள் இவர்கள்’ என்பதை விஜய் அறியமாட்டாரா? அதனால் தான் இவர்களை விட தன்னையே நம்புகிறார் விஜய். கூட்டணிக் கூட்டம் எல்லாம் முள்வேலிக்கு பெயிண்ட் அடிக்கும் காரியங்களே!

**பல்வேறு பேரங்களின் மூலமாக அ.தி.மு.க. உறுப்பினர்களை விஜய் ராஜினாமா செய்ய வைக்கிறார். 12 பேர் வரை ராஜினாமா செய்ய வைப்பது அவரது திட்டம். இதற்கு யார் முதலீடு செய்கிறார்கள், எவ்வளவு முதலீடு செய்யப்படுகிறது என்பதை அதிகார மட்டங்கள் அறிந்தவர்கள் அறிவார்கள். இது யாருடைய ஆட்சி, யாருடைய நலனுக்கான ஆட்சி இது என்பதையும் அனைவரும் அறிவோம். இந்த முகத்திரை கொஞ்சம் கொஞ்சமாக விரைவில் கிழியும்.**

**கவிழும் போது மொத்தமாய்த் தெரியும்!**






முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103–ஆவது பிறந்த நாளை முன்னிட்டு கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை தென் மேற்கு மாவட்டக் கழகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் சென்ற ஜூன் மாதம் முழுவதும் சுமார் 256 நல உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளை கழக நிர்வாகிகள் நடத்தினர். அவர்களுக்கான பாராட்டு விழா அடையாறு – முத்தமிழ் மன்றத்தில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு, ஆட்சிப்பொறுப்பில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், என்றும் மக்களுக்கான களத்தில் தி.மு.கழகம் முன்வரிசையில் நிற்கும் என்பதை உறுதி செய்கிற வகையில் கலைஞர் பிறந்த நாள் நலத்திட்ட நிகழ்ச்சிகளை நடத்திய சென்னை தென் மேற்கு மாவட்டக் கழக நிர்வாகிகளைப் பாராட்டி உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

அண்ணன் துறைமுகம் காஜா அவர்களை நம் தலைவர் அவர்கள் சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் தலைவராகவும், நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தலைவர் அவர்கள் நியமித்தார்கள். அரசுப் பொறுப்பிலும் துறைமுகம் காஜா அவர்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டவர். அப்படிப்பட்ட அண்ணனின் இல்ல திருமணத்துக்கு வந்திருப்பதில், நமக்கெல்லாம் உள்ளபடியே மிகப்பெரிய பெருமை.

**இஸ்லாமியர்களுடனான உறவு யாராலும் பிரிக்க முடியாது!**

இந்த விழாவில் இஸ்லாமிய பெருமக்கள் பலபேர் கலந்து கொண்டிருக்கிறீர்கள். இன்றைக்கு நாட்டில் என்ன நடக்கிறது என்பதை, நீங்கள் அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். என்ன நடந்தாலும், இன்றைக்குச் சில பேர் சோஃபா வந்த உடனே நம்மை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள், ஆனால், நீங்கள் அத்தனை பேரும் நாங்கள் என்றைக்கும் கழகத்துடன் இருப்போம் என்று உறுதியோடு வந்திருக்கிறீர்கள். ஏன்னென்றால் இஸ்லாமியர்களுக்கும் கழகத்துக்குமான அந்த உறவை யார் நினைத்தாலும் பிரிக்க முடியாது, யார் என்ன சொன்னாலும், எந்த அவதூறுகளைப் பரப்பினாலும் சிறுபான்மை மக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் கழகம் என்றைக்குமே ஒரு காவல் அரணாக நிச்சயம் இருக்கும். உங்களோடு நம் தலைவர் அவர்களும் திராவிட முன்னேற்றக் கழகமும் உறுதுணையாக நிற்கும் என்று கூறிக்கொண்டு, இப்பொழுது ஏற்பட்டிருக்கக் கூடிய இந்த அரசியல் பேரிடர் காலத்திலும் நம் தமிழ்நாட்டை, நம் திராவிட முன்னேற்றக் கழகம், நம் தலைவர் அவர்களும் நிச்சயம் உங்களுக்காக நின்று காப்போம், தமிழ்நாட்டை மீட்போம் என்று கூறி, மணமக்களுக்கு மீண்டும் உங்களின் அத்தனை பேரின் சார்பாக என் வாழ்த்துகளைக் கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி நாசர், நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான், எஸ்.டி.பி.ஐ. கட்சியின் தலைவர் நெல்லை முபாரக், டி.கே.எஸ்.இளங்கோவன், திருப்பூர் அல்தாஃப், முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கு.பிச்சாண்டி, தங்கம் தென்னரசு தா.மோ. அன்பரசன், ராஜகண்ணப்பன், மதிவேந்தன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, அன்பகம் கலை, தாயகம் கவி, மாவட்டக் கழகச் செயலாளர்கள் சுந்தர், கோ.தளபதி, மயிலை வேலு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வில்சன், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், சட்டமன்ற உறுப்பினர் மனோஜ் பாண்டியன், கருணா நிதி, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் கிருஷ்ணசாமி, துணை மேயர் மகேஷ்குமார், பூச்சி முருகன், காசி முத்துமாணிக்கம், மருத்துவர் சுபேர் கான், பூவை ஜெரால்டு, செந்தில் வேல், பத்மநாபன், பகுதிச் செயலாளர் நாராயண பிரசாத், மாநகரச் செயலாளர் பிரகாஷ், நகரச் செயலாளரும், நகராட்சித் தலைவருமான மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சுரேஷ் குமார் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.

## “வெட்கமாயில்லையா விஜய் அரசே?”

# மு.க.ஸ்டாலின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அகற்றம்!

## தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி!

*சென்னை, ஜூலை 7 -*

முதலமைச்சர் ஜோசப் விஜய் செங்கல்பட்டு மாவட்டம் நெம்மேலியில் உள்ள கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தைப் பார்வையிடும் நிலையில், நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் இரண்டாவது பெரிய அலகுக்கான அடிக்கல் கல்வெட்டு அகற்றப்பட்டிருக்கிறது. இதற்கு தி.மு.க. ஐ.டி.விங் கடும் கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இதுகுறித்து தி.மு.க. ஐ.டி. விங் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது,

“சென்னையின் குடிநீர்த் தேவையைத் தீர்ப்பதற்காக 2006ஆம் ஆண்டில் தி.மு.க. அரசு நெம்மேலியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வராக இருந்தபோது, உள்ளாட்சித் துறை முதலமைச்சராக இருந்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்தத் திட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்து நிறைவேற்றினார்.

2021ஆம் ஆண்டு அவரே முதலமைச்சரான நிலையில், பெருகி வரும் சென்னையின் மக்கள் தொகையையும், விரிந்து வரும் சென்னை மாநகராட்சியின் பரப்பளவையும் கருத்தில் கொண்டு 24.2.2024 அன்று நெம்மேலி கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் இரண்டாவது பெரிய அலகுக்கான அடிக் கல்லை நாட்டி, தற்போது பணிகள் ஏறத்தாழ நிறைவடையும் நிலையில், இதனைப் பார்வையிட முதல்வர் விஜய் வருகிறார் என்கிற அற்ப காரணத்திற்காக, இரண்டாம் அலகு திட்டத்தின் கல்வெட்டை அகற்றியிருக்கிறது த.வெ.க. அரசு.

ஆட்சிக்கு வந்த 50 நாட்களில் எந்தவொரு உருப்படியான திட்டத்தையும் உருவாக்க வக்கில்லாத விஜய் அரசு, திராவிட மாடல் அரசின் முதல்வர் தொடங்கிய திட்டத்தின் அடிக்கல்லை அகற்றுவது அதன் பயபீதியையே காட்டுகிறது. முடிவடையும் நிலையில் உள்ள திராவிட மாடல் அரசின் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டத்தின் மீது ஸ்டிக்கர் ஒட்டுவதற்காக, கல்வெட்டை அகற்றுவது வெட்கமாயில்லையா திறமையற்ற விஜய் அரசே?” என தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி எழுப்பியிருக்கிறது.

ஆனால், இந்த கல்வெட்டு நெடுஞ்சாலை ஓரமாக இருந்ததால் பாதிப்புக்கு உள்ளானதாகவும், எனவே சீரமைக்கவே கல்வெட்டு அகற்றப்பட்டதாகவும் அதிகாரிகள் விளக்கமளித்துள்ளனர்.

இருப்பினும் முதல்வர் வருகை காரணமாக முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பெயர் பொறிக்கப்பட்ட கல்வெட்டு அகற்றப்பட்டிருப்பது அரசியல் தளத்தில் விவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.



திருப்பூர் வடக்கு மாவட்டம், அன்னூர் தெற்கு ஒன்றியம், நல்லிசெட்டி பாளையத்தில் தந்தை பெரியார் படிப்பகம் மற்றும் தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் முழுவுருவச் சிலையை கழக துணைப் பொதுச் செயலாளர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.இராசா எம்.பி., புரட்சித்தமிழன் சத்தியராஜ் ஆகியோர் திறந்து வைத்தனர். இதில் தந்தை பெரியார் திராவிடர் கழக பொதுச் செயலாளர் கு.இராமகிருட்டிணன், திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேசுகுமார், முன்னாள் மாவட்டச் செயலாளர் சி.ஆர்.ராமச்சந்திரன், ஒன்றியச் செயலாளர் தனபால், தந்தை பெரியார் திராவிடர் கழக அன்னூர் ஒன்றிய தலைவர் ப.சாந்திராமன், மாவட்ட துணைத் தலைவர் ந.கி.ஜோதிராம் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.